பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 18 வியாழக்கிழமை 01.05.2025 கதிர் 173

இனி இது ரகசியம் அல்ல!

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி உட்பட பல பகுதிகளிலும் நேற்றிரவு திடீரென ஒரு சுவரொட்டி முளைத்திருந்தது. அன்பான வாக்காளரே! மூன்று கோமாளிகளும்.

☞2

## விட்ட தவறுகளுக்காக

# ஜே.வி.பி. தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



ஜேவிபி தாங்கள் விட்ட தவறுகளுக்கு தமிழ்மக்களிடம்மன்னிப்புகோரிதங்களை சுயவிமர்சனம்செய்துகொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணித்தலைவர்களில் ஒருவரும் ஈபிஆர்எல்எவ் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன்.

இடதுசாரிபாரம்பரியகட்சியாகதன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் ஜேவிபி நாட்டின் ஒடுக்கப்பட்ட

☞2

## பெற்றோல், டீசல் விலைகள் மிகச் சிறியளவில் குறைப்பு



பெற்றோல், டீசல் உள்ளிட்ட அனைத்து வகையான எரிபொருள்களின் விலைகளும் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்படுவதாக இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன்படி, 92 ஒக்டோன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை ரூ.6 குறைக்கப்பட்டுள்ளது. 95 ஒக்டோன் பெற்றோல் விலை லீற்றருக்கு ரூ. 20 குறைக்கப்பட்டுள்ளது. லங்கா வைட் டீசல் லீற்றருக்கு ரூ. 12 குறைக்கப்பட்டுள்ளது. சூப்பர் டீசல் லீற்றருக்கு ரூ. 6 குறைக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை ரூ. 5 குறைக்கப்பட்டுள்ளது என இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

92 ஒக்டேன் பெற்றோலின் புதிய விலை ரூ.293 என்றும் 95 ஒக்டேன் பெற்றோலின் புதிய விலை ரூ. 341 ஆகவும், லங்கா வைட் டீசலின் புதிய விலை ஒரு லீற்றர் ரூ. 274 ஆகவும், ஒரு லீற்றர் சூப்பர் டீசலின் புதிய விலை ரூ. 325 ஆகவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை ரூ. 178 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளன.

## தமிழ் அரசின் மே தினம் இன்று யாழ். நகரில்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். நகரிலுள்ள வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் உத்தியோகபூர்வ மே தின எழுச்சிக் கூட்டம் இது என அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர் சிவஞானம் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் சுமந்திரன் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் தொழிலாளர்களையும் ஆதரவாளர்களையும் பங்குபற்றும்படி கட்சி அழைப்பு

## வீதிப் பாதுகாப்பை உறுதிசெய்ய தேசியத் திட்டம் தயாரிக்க முடிவு

இலங்கையில் வீதிப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக தேசிய அளவிலான திட்டத்தை தயாரிக்க ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளது.

'கிளீன் சிறீலங்கா' திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. நாளுக்கு நாள் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயமடைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு ஆளும்தரப்பு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தடுப்பு குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், சாலைப் பயன்பாட்டில் ஒழுக்கத்தை

☞2

## சுவிஸ் தூதரின் வீட்டிலிருந்து பெருமளவு நகைகள் திருட்டு

### 45 லட்சம் ரூபாய் பெறுமதியானவை

இலங்கைக்கான சுவிஸ் தூதரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் உள்ள ஒரு பெட்டகத்திலிருந்து சுமார் ரூ.4.5 மில்லியன் மதிப்புள்ள தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கழுத்தணிகள் மற்றும் ரத்தினக் கற்கள் பதித்த பதக்கங்கள் திருடப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுத் தொடர்பாக ஏப்ரல் 29

☞2

## உப்பு விலை எகிறியதால் கருவாட்டு உற்பத்தி பாதிப்பு

### பல குடும்பங்கள் வருமானம் இழப்பு

நாட்டில் உப்பின் விலை கிலோ 320 ரூபாயாக விலை அதிகரித்துள்ள காரணத்தால் வடமாகாண கருவாட்டு உற்பத்தியாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் கருவாட்டு உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உப்பின் விலை அதிகரிப்பு காரணமாகக் கருவாட்டு உற்பத்தி வீழ்ச்சியடைந்திருப்பதே இதற்குக் காரணம்.

தற்போதைய ஆளும்தரப்பு இந்த விடயத்தில் கவனம் செலுத்தி உப்பின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு முல்லைத்தீவு

☞2

## பொது சுகாதாரப் பரிசோதகர் லஞ்சம் பெற்றபோது கைது

காரடியனாறு பகுதியில் ரூ. 6,000 லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் சுகாதார பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் பெண் ஒருவர் வீடு கட்டி வருகின்றார். அவர் பிரதேச சபையில் முன் அனுமதி பெறாமல் வீடு அமைத்து வருவது குற்றம் என்று சுட்டிக்காட்டிய சுகாதாரப் பரிசோதகர், அனுமதியை இடையூறு இல்லாமல் பெற்றுத் தருவதற்கு 12 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வீட்டு

☞2

## ஆளும் கட்சி வேட்பாளரின் சகோதரனின் கடையில் பெருமளவு வாக்காளர் அட்டைகள்

### வவுனியாவில் தபால் ஊழியரகள் உட்பட இருவர் கைது

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளரின் சகோதரனின் வியாபார நிலையம் ஒன்றில் இருந்து பெருமளவு வாக்காளர் அட்டைகள் பொலிஸாரால் நேற்று கைப்பற்றப்பட்டன. இது தொடர்பில் வேட்பாளரின் சகோதரனும், தபால் ஊழியர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பூந்தோட்டம் பகுதியில் உள்ள

☞2

## முன்னாள் ஜனாதிபதிகளின் வாகனங்கள் மீள ஒப்படைப்பு

முன்னாள் ஜனாதிபதிகள் ஐந்து பேரில் நான்கு பேர் தற்போது தங்கள் வசம் இருந்த மேலதிக வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளனர் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைத் தவிர, மற்ற அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் தங்கள் அதிகப்படியான வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளனர் என்று ஜனாதிபதி செயலகத்தின் மூத்த செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட மூன்று வாகனங்களில் ஒன்றைத் திருப்பித் தருமாறு ஜனாதிபதியின் செயலாளர் சனத் நந்திக குமநாயக்க முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அனுப்பிய எழுத்துப்பூர்வ அறிவிப்பின்படி இந்த வாகனங்கள் ஒப்படைக்கப்

☞2

## காஷ்மீர் தாக்குதலை கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

### பாகிஸ்தான் தூதரகம் முன்பாக



இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்ட காஷ்மீரில் சமீபத்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதாகக் கூறி, கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஆணையத்திற்கு வெளியே நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

காஷ்மீரில் சமீபத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதாகக் கூறி, சுமார் 200 முதல் 300 பேர்வரை கலந்துகொண்ட

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஒரு பைத்தியமும் போதும்.

இனிமேலாவது பொறுப்புடன் வாக்களிப்போம்.

யாழ்ப்பாண கல்விச் சமூகம் என்ற பெயரில் இந்தச் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் யார் யார் என்று தனித் தனியாகப் பிரித்துக் காட்டவேண்டியதில்லை என்று நினைக்கின்றேன். உலகத் தமிழர்கள் எல்லோருக்கும் அவர்கள் யார் என்பது நன்கு தெரியும், புரியும்.

எனினும் கல்விச் சமூகம் அந்தச் சமூகம் இந்தச் சமூகம் என்று அநாமதேய சுவரொட்டிகள் மூலமாகவே இத்தகைய கருத்துக்களைசமூகத்திற்குச்சொல்லவேண்டிய நிலைதான் இன்றும் இருக்கிறது என்பது கூர்ந்து அவதானிக்கப்படவேண்டியதாக இருக்கின்றது.

.............................................



இம்முறை உள்ளாட்சித் தேர்தலுக்கு மத்தியிலும் மே தினத்தை பெருமெடுப்பில் நடத்துகின்ற ஒரே கட்சியாக என்பிபியே இருக்கின்றது. ஆளும்தரப்பின் பிரதான மே தினக் கூட்டம் காலி முகத்திடலில் இன்று நடக்கிறது.

இதற்காக இலங்கை முழுவதிலுமிருந்து சுமார் 5,532 பேருந்துகள் கொழும்பில் உள்ள காலி முகத்திடலுக்கு வரும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 221,000 பேர் காலி முகத்திடலுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எல்லாவற்றிலும் மிச்சம் பிடிக்கும் என்பிபி ஆளும்தரப்பு இதில் மட்டும் தாராளம் காட்டுகின்றது. மீண்டும் மீண்டும் பல லட்சம் கோடிகளைக் கொட்டிச் சீரமைக்கப்பட்ட காலி முகத்திடலில் லட்சக்கணக்கில் மக்களைத் திரட்டி தனது அரசியல் பலத்தைக் காண்பிக்க முயற்சிக்கின்றது. மற்றக் கட்சிகள் எல்லாம் தேர்தலுக்குச் செலவழிக்கவே பணம் இல்லாதிருப்பதால் மே தின பேரணிகள் மீது அதிக அக்கறை செலுத்தவில்லை. ஆனால், என்பிபிமட்டுமேபெருமெடுப்பில்மேதினத்தை ஒழுங்குபடுத்தியுள்ளது. இன்றையநிகழ்விற்கு மட்டுமே பல கோடிகள் செலவாகும் என்று கூறப்படுகின்றது.

கொழும்புக்கு வரும் ஆளும்தரப்பின் ஆதரவாளர்களைக் கவனிப்பதற்காக 2 ஆயிரம் பொலிஸார் வேறு கடமையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். தேர்தல் நேரத்தில் மற்றைய இடங்களிலிருந்தும் அழைக்கப்பட்ட பொலிஸார் கொழும்பில் குவிக்கப்பட்டுள்ளார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய இனத்தின் உரிமைகளை மதித்து நடப்பதற்கும் ஒடுக்கப்பட்ட தொழிலாள வர்க்கத்தின்உரிமைகளைமதித்துநடப்பதற்கும் இந்த மேதினம் வழிகோலட்டும் என்று அவர் தனது மேதின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார். அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் வாழும் பாட்டாளி வர்க்க மக்களுக்கும் சர்வதேச பாட்டாளி வர்க்க தோழர்களுக்கும் உலகின் ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களுக்கும் இலங்கை தமிழ் தேசிய இன மக்களுக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உழைப்பாளர் தின வாழ்த்துகள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் உழைக்கும் வர்க்கத்தின் காவலனாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் ஜனதா விமுக்தி பெரமுன என்றழைக்கப்படும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கின்றது.

அரச உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்பு, தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் உழைக்கும் வர்க்கத்தினருக்கான இன்னோரன்ன சலுகைகள் பற்றி தேர்தல் அறிக்கையில் கூறியதுடன் நாட்டில் தங்களது ஆட்சியில் தேனாறும் பாலாறும் ஓடும் என்று கூறினார்கள். ஆனால் ஆட்சிப்பீடமேறி அரையாண்டு கடந்த பின்னரும் தோட்டத் தொழிலாளர்கள் எந்த நிவாரணமுமற்ற ஏதிலிகளாகவே இன்னமும் இருக்கின்றனர். அதனைப் போலவே தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாள தோழர்களுக்கும் எதுவித ஊதிய உயர்வோ பணிப்பாதுகாப்புத் திட்டங்களோ கிடைக்கவில்லை. இந்த இலட்சணத்தில்தான் இலங்கையில்முதலாவதாகஆட்சிப்பீடமேறிய இடதுசாரி மார்க்சிய லெனினியவாதிகளின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றது.

இந்தநாட்டின்தொழிலாளவர்க்கத்தினரின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள்கூட இவர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் அனைவரும்வடக்கு-கிழக்கிற்குவரும்பொழுது ஒரு மந்திரத்தை உச்சாடனம் செய்கிறார்கள். தாங்கள் இனவாதம், மதவாதம், சாதிவாதம் என்பனவற்றிற்கு எதிராக இருக்கின்றனர் என்றும் ஏதோ தமிழ் மக்கள்தான் அவற்றை உயர்த்திப்பிடிக்கின்றனர் எனவும் ஒரு பிரமையை உருவாக்கப் பார்க்கிறார்கள். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சிகளுக்கு அடுத்ததாக 1971ஆம் ஆண்டு ஜேவிபி கிளர்ச்சியின்போதும் 1988-, 89 ஜேவிபியின் கிளர்ச்சியின்போதும் தமிழ் மக்களுக்குவிரோதமானகொள்கைகளையும் கோட்பாடுகளையும் முன்வைத்து இனவாதிகளாக நடந்துகொண்டவர்களே ஜேவிபி தரப்பினர்.

சிங்களமக்கள்மத்தியில்இனவாதத்தீயை உருவாக்கிபல்வேறுபட்டசந்தர்ப்பங்களில்தமிழ் மக்களுக்குஎதிரானகலவரங்களைஉருவாக்கி, நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் அவர்களைக் கொன்றொழித்து ஏதிலிகளாக்கி அவர்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடித்த முழுப்பங்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தையும் அவர்களது கூட்டத்தையுமே சாரும்.

தங்களது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தேர்தல் வெற்றிகளுக்காக தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறுபட்ட சட்டங்களை உருவாக்கி அதன் மூலம் இனவாதத்தைத்தூண்டிவளர்த்தவர்கள்சிங்கள ஆளும்தரப்பினர். அதில் இன்றுள்ளவர்களும் அடக்கம்.

சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவாத செயற்பாடுகளைக்கண்டித்தும்தமிழ்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் முகமாகவும் தமிழர் தரப்பு தமது கோரிக்கைகளை வைப்பதானது எந்த சந்தர்ப்பத்திலும் இனவாதமாகாது. அதற்காக குரல்கொடுப்பதோ, பேசுவதோ, எழுதுவதோ இனவாதசெயற்பாடாக அமைய மாட்டாது. எனவே, சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள இனவாதத் தீயிலிருந்து சிங்கள மக்களை மீட்டெடுப்பதற்கு ஜேவிபி அவர்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டுமென்பதுடன், அதற்கு முன்பாக தாங்கள் விட்ட தவறுகளுக்கு தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோரி தங்களை சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டும்.

தேர்தலில் வெல்வதற்காக மட்டும் தங்களை இன, மத, சாதிபேதமற்றவர்களாகக் காட்டிக்கொள்ள முனைவது வெற்று ஆரவாரக் கூச்சலாக இருக்குமே தவிர, அதில் எந்தவொரு ஆக்கபூர்வமான பொருளும் இருக்காது. தமிழ் மக்களின் ஆதரவுடன் மூன்றிலரண்டுபெரும்பான்மையுடன்வென்று வந்திருக்கின்றவர்கள் இப்பொழுதாவது தங்களை சுயவிமர்சனம் செய்து திருத்திக்கொள்ளாவிட்டால் ஒருபோதும் அவர்கள் திருந்த மாட்டார்கள்.

நாட்டில் இனவாதத்தைத் தோற்றுவித்தவர்கள் சிங்கள ஆளும் வர்க்கத்தினரே. எனவே அவர்கள்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் முன்வைக்க வேண்டும். அதற்கு தாங்கள் இதுவரைகாலமும் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகத் தூண்டிவிட்ட இனவாதக் கருத்துகளுக்கு மன்னிப்பு கோருவதுடன், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்குத் தாங்களே காரணம் என்பதை மக்கள் மன்றத்தில் ஏற்றுக்கொண்டு இனி ஒருபோதும் அத்தகைய தவறுகள் இடம்பெறாது என்ற உத்தரவாதத்தை அளித்து இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சிங்கள தலைமைகளின் தலையாய கடமையாகும்.

இந்த மேதினம் என்பது உழைக்கும் வர்க்கம் தங்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள உந்துசக்தியாக இருக்கட்டும் என்பதுடன் ஜேவிபி போன்றோர் தம்மை சுயவிமர்சனம்செய்து சீர்திருத்திக்கொள்ளவும் உகந்ததாக இருக்கட்டும் - என்றுள்ளது.

## சுவிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதர் அளித்த முறையான முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

தூதர் ஏப்ரல் 12 சுவிட்சர்லாந்திற்குச்சென்று ஏப்ரல் 27 இலங்கைக்குத் திரும்பினார். அவர் இல்லாத நேரத்தில், அவரது ஊழியர்களில் ஐந்து பேர் வீட்டில் பணியில் இருந்தனர்.

நடந்து வரும் விசாரணையின் ஒரு பகுதியாக ஐந்து ஊழியர்களிடமிருந்தும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

ஒரு வைர மோதிரம், ஒரு பச்சை கல் மோதிரம், ஒரு தங்க நெக்லஸ், ஒரு வெள்ளை தங்கவளையல், ஒருதங்கதிருமணமோதிரம், ஒரு ரூபி பதித்த தங்க மோதிரம், ஒரு தங்க பதக்கம், சபையர் கற்களால் அமைக்கப்பட்ட ஒரு ஜோடி தங்க காதணிகள் மற்றும் ஒரு ஒமேகாலேடிமேடிக்கைக்கடிகாரம்என்பனவும் திருட்டுப்போன பொருட்களில் அடக்கம். இந்த பொருட்கள் வீட்டின் மேல் மாடியில் உள்ள ஒரு அறையில் ஒரு பெட்டகத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்ததாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையாளரான பெண் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததை அடுத்து அவரது வீட்டுக்கு வந்து பதுங்கியிருந்த அதிகாரிகளால் லஞ்சத்தை வாங்க வந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கைது செய்யப்பட்டார்.

வீட்டுஉரிமையாளர்ஏற்கனவேஅவருக்கு 6000 ரூபாய் லஞ்சத்தை வழங்கியிருந்தார் என்றும்எஞ்சிய தொகையைப் பெறுவதற்காக வந்தபோதே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உப்பு விலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் சட்டவிரோத தொழில்களை ஊக்குவிக்கும்நடவடிக்கைகளில்தற்போதைய தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஈடுபட்டு வருகின்றது. இந்த விடயத்தில் ஆளும்தரப்புக் கவனம்செலுத்திசட்டவிரோததொழில்களுக்கு ஒத்துழைப்புவழங்குவதைநிறுத்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன.

அமைச்சர்களுக்கான வாகனங்களை இரண்டாக மட்டுப்படுத்துவது என்று அண்மையில் அமைச்சரவை முடிவு செய்தது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் அமைச்சர்களுக்கான வாகன வசதிகளே வழங்கப்படுவதால்அவர்களிடமிருந்தமேலதிக வாகனங்களை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஏப்ரல் 23க்கு முன்னர் சம்பந்தப்பட்ட வாகனங்களை ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கவேண்டும் என்று ஏப்ரல் 19 ஜனாதிபதிசெயலாளர்கடிதம்அனுப்பியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

மகிந்த ராஜபக்ச பயன்படுத்திய லேண்ட் க்ரஷர் ஈ8 கார் ஏப்ரல் 28ம், மைத்திரிபால சிறிசேன பயன்படுத்திய லெக்ஸஸ் டிஃபென்டர் ஏப்ரல் 24ம், கோட்டாபய ராஜபக்ச பயன்படுத்திய லேண்ட் ரோவர் ஜீப் ஏப்ரல் 23ம், ரணில் விக்ரமசிங்க பயன்படுத்திய லேண்ட் க்ரஷர் பிராடோ ஏப்ரல் 28ம் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

## ஆளும் கட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றில் உள்ளூராட்சி தேர்தலுக்குரிய வாக்காளர் அட்டைகள் பெருமளவில் இருப்பதாக தேர்தல் திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற அதிகாரிகள் மற்றும் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் அங்கிருந்த ஒரு தொகை வாக்காளர் அட்டைகளையும் கைப்பற்றினர். அதனை உடைமையில் வைத்திருந்த குற்றத்திற்காக அவ் வட்டாரத்தில் ஆளும் கட்சியில் போட்டியிடும் வேட்பாளரின் சகோதரனான வியாபார நிலையத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டதுடன், அந்தப் பகுதிக்குரிய தபால் ஊழியரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் அவர்களை மே 6 வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (100)

## காஷ்மீர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த போராட்டத்தில், 'எங்களுக்கு பாகிஸ்தான் தேவையில்லை' போன்ற வாசகங்களும், பயங்கரவாதத்தைஎதிர்த்துப்போராடுவதற்கான இந்தியாவின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வெளிப்பாடுகளும் இடம்பெற்றிருந்தன.

ஏப்ரல் 22 பஹல்காம் அருகே உள்ள பைசரன் பள்ளத்தாக்கில் நடந்த தாக்குதல் தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கடும் கோபத்தை வெளிப்படுத்தினர், ஐந்து துப்பாக்கிதாரிகள் இந்திய சுற்றுலாப் பயணிகள் குழுவினர்மீதுகண்மூடித்தனமாகத்துப்பாக்கிச் சூடு நடத்தி 26 பேரைக் கொன்றனர்.

## வீதிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துவதும் அவசரத் தேவை என்பதை உணர்ந்து, 'கிளீன் சிறீலங்கா' திட்டத்தின் கீழ் இந்தத் தேசியத் திட்டம் தயாரிக்கப்பட உள்ளது.



# 2025 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லை

## ஆளுநர் வேதநாயகன் வேதனை

2025ஆம் ஆண்டுக்கானதிட்டங்களின்நடைமுறைப் படுத்தலின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லை எனச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஒதுக்கப்பட்ட நிதியை ஒதுக்கிய திட்டங்களுக்கு உரிய காலப்பகுதிக்குள் செலவு செய்து முடிக்கவேண்டியது பொறுப்பு எனக் குறிப்பிட்டார்.

திட்டங்களைஉரியகாலத்தில்நடைமுறைப்படுத்தி முடிக்காமல் அதற்கு சாட்டுப்போக்குச் சொல்லவேண்டாம் எனவும் நா.வேதநாயகன் மேலும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட மீளாய்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவிக்கையில் -

நடப்பு ஆண்டின் மூன்றிலொரு காலம் நிறைவடைந்துள்ள நிலையில் திட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் இல்லாமல் உள்ளது. எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகச் செலவு செய்வதுடன் அடுத்த ஆண்டு அதிகளவு நிதியைக் கோரவேண்டும். அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களது தலைமைத்துவத்தில் தான் இந்தத் திட்டங்களின் நடைமுறையாக்கத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது.

கடந்தமீளாய்வுக்கூட்டத்தில்தெரிவித்ததைப்போல திட்டங்களின் நடைமுறையாக்கங்களை செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிடுவதுடன், இரு வாரங்களுக்கு ஒரு தடவை மீளாய்வுக் கூட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.

திட்டங்களுக்கான ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்யும்போது அவதானம் தேவை. குறைந்த விலையில் கேள்விகூறலைச் சமர்பித்து ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதை நடைமுறைப்படுத்தாமல் விட்டுவிடுவார்கள்.

தவறிழைக்கும் ஒப்பந்தகாரர்களை கறுப்புப் பட்டியலில் உள்வாங்க வேண்டும் என்பதை பல தடவைகள் சொல்லியுள்ளேன். அதை நடைமுறைப்படுத்த வேண்டியது பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகளின் பொறுப்பு. அதைச் செய்வதன் ஊடாகவே எதிர்காலத்திலாவது பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும், என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - நிதி எஸ்.குகதாசன், நிதி முன்னேற்றம் தொடர்பில் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் ரீதியாக தெரியப்படுத்தினார்.

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கோரிய அவர், கட்டுநிதி விடுவிப்புத் தொடர்பில் தாமதங்கள் ஏதுமில்லை எனக் குறிப்பிட்டார்.

அதேபோல மாகாணத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாய் உரியவாறு காலாண்டுக்குரியது கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள நிலையான வைப்பு நிதியை அந்தப் பிரதேசங்களின் சிறிய அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஆளுநர், வருமானம் குறைந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாகாணத்தின் நிதியை வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்றும் குறிப்பிட்டார். நிரல் அமைச்சுக்கள் திட்ட முன்மொழிவுகளை முன்வைத்தால் நிதியை விடுவிக்கத் தயாராகவுள்ள நிலையில் தேவையான திட்;டங்களைச் சமர்பித்து நிதியைப்பெற்று நடைமுறைப்படுத்துமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதன் பின்னர் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் எம்.கிருபாசுதன் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் ரீதியாகத் தெளிவுபடுத்தினார்.

2025 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையின் நிதிக்கூற்று அறிக்கை புத்தகம் இந்தக் கூட்டத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநரிடம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளரால் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை இந்த முன்னேற்ற மீளாய்வுக்கூட்டத்தில், வடக்கு மாகாணத்தில் தற்போது முருங்கை மற்றும் மாம்பழச் செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அது தொடர்பில் ஆராய்ச்சிகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்த ஆளுநர், புதிய இனங்களை அறிமுகப்படுத்தும்போது பாரம்பரிய இனங்களை அழிவடையாமலும் பார்த்துக்கொள்வது விவசாயத் திணைக்களத்தின் பொறுப்பு எனக் குறிப்பிட்டார்.

## விசேட திறனுள்ள பாடசாலை மாணவர்களுக்கான திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறி திருமலையில்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விசேட திறனுள்ள பாடசாலை மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியானது செவ்வாய்க்கிழமை மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன் தலைமையில் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக சேவைகள் திணைக்களத்தின அறிவுறுத்தலுக்கு அமைவாக மாற்றுதிறனாளி மாணவர்களை எதிர்காலத்தில் நிலையான தொழில் வாய்ப்புக்குள் உட்படுத்துவதற்குத் தேவையான திறன்களை படிமுறை படி முறையாக அபிவிருத்தி செய்தல் இதன் முக்கிய நோக்கமாகும்.

மாணவர்களின் நேர முகாமைத்துவம், குழு செயற்பாடு, தலைமைத்துவம் போன்ற திறன்களை எவ்வாறு வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதன்போது திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. கௌரிசாந் மற்றும் விதாதா உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





## முன்மாதிரியான உள்ளாட்சி சபையாக நாவிதன்வெளியை மாற்றியமைப்போம்

### கால்பந்து சின்ன சுயேச்சை வேட்பாளர் நளீர் தெரிவிப்பு

(ஹாரீஸ்)

நாவிதன்வெளி பிரதேசத்தில் வாழும் மூவின மக்களுக்கும் பாரபட்சம் இன்றி சேவை செய்து ஏனைய சபைகளுக்கு முன்மாதிரியான சபையாக நாவிதன்வெளி பிரதேச சபையினை மாற்றியமைப்போம் என கால்பந்து சின்ன சுயேச்சை வேட்பாளர் எம்.ஏ.நளீர் தெரிவித்தார்.

வேட்பாளர் வாஜித் தலைமையில் ஐந்தாம் கிராமம் சாளம்பைக்கேணி மத்தி வட்டாரத்தில் கால்பந்து சின்னம் சுயேட்சை வேட்பாளர் சுபைதீன் அவர்களை ஆதரித்து அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே இதனைத் தெரிவித்தார்.

இதன் போது அவர் கருத்து தெரிவிக் கையில் –

கடந்தகாலங்களில்பொய்யானவாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி அரசியல் செய்யும் அரசியல்வாதிகளுக்கு இத் தேர்தலின் தகுந்த பாடம் புகட்டுவார்கள் எனவும் சில கட்சி அரசியல்வாதிகள் மக்களின் அபிவிருத்தி திட்டங்களுக்காக வழங்கப்படுகின்ற நிதியில் மோசடிகள் செய்து அவர்களின் பைகளை நிரப்புகின்ற சந்தர்ப்பங்களும் அதிகம் காணப்பட்டதை நாம் அறிவோம்.

இவ்வாறான ஊழல்வாதிகளை விரட்டியடிப்பதற்காக நாங்கள் எவ்வித கட்சியும் சாராமல் இத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுகின்றோம்.

இதன் மூலம் மக்களுக்கு பல்வேறுபட்ட சேவைகளை வழங்கி ஏனைய சபைகளுக்குள் முன்மாதிரியானசபையாகநாவிதன்வெளி பிரதேச சபையை மாற்றியமைப்போம் எனத் தெரிவித்தார்.

மேலும் நாங்கள் கடந்த காலங்களில் பல கிராமங்களுக்கு பல்வேறு பட்ட சேவைகளை செய்து காட்டியுள்ளோம். தனிப்பட்ட ரீதியாக பல்வேறுபட்ட நாடுகளின் நிறுவனத் தலைவர் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்து உரையாடி அவர்களின் நிதிப்பங்களிப்பின் ஊடாக கிராம மக்களுக்குபலஉதவித்திட்டங்கள்எமதுஅமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதை யாரும் மறந்திருக்க



முடியாது.

அது மட்டுமல்ல ஓர் அரசியல்வாதியால் கூட செய்ய முடியாத வேலைத்திட்டங்களை கூட நாங்கள் செய்திருக்கின்றோம்.

இக்கிராம மக்கள் ஒன்று மட்டும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்று எமக்கு கிடைக்கும் அதிகாரத்தின் ஊடாக அச்சமின்றி மக்களின் உரிமைக்காக செயற்பட முடியும் என்பதோடு எமக்கு கிடைக்கப்பெறும் சம்பளப் பணத்தினை கூட முழுமையாக மக்களின் நலனுக்காகவே பயன்படுத்துவோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கால்பந்து சின்னத்தில் சுயேச்சையாக போட்டியிடும் நாங்கள் அமோக வெற்றி பெறுவது நிச்சயம். இருப்பினும் வட்டாரத்தை வென்றெடுப்பதற்காக இக்கிராம மக்கள் பெறுமதியான தங்களின் வாக்குகளின் ஊடாக எங்களை ஆதரிக்க வேண்டும் எனவும் கால்பந்து சின்னம் சுயேச்சை தலைமை வேட்பாளர் எம்.ஏ.நளீர் இதன்போது வேண்டிக்கொண்டார்.

இந்த நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உதவி தவிசாளர் ஏ.கே.அப்துல் சமட், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சுபைதீன் மற்றும் கால்பந்து சின்னத்தில் சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உழைக்கும் மக்களின் உரிமைக் குரலான மே தினம்

இன்றைய தினம், மே 1 உலகத் தொழிலாளர் தினமாக உலகெங்கும் நினைவு கூறப்படுகின்றது. 1886–ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில் வெறும் எட்டு மணி நேர வேலைக்காலத்திற்காக தொழிலாளர்கள் எழுச்சியுடன் மேற்கொண்ட போராட்டத்தின் நினைவாக இந்த நாள் ‘மே தினம்’ என அழைக்கப்படுகிறது. அதிலிருந்து இன்றுவரை, உலகின் பெரும்பாலான நாடுகள் இந்த நாளை உழைக்கும் மக்களின் உரிமை தினமாகக் கொண்டாடுகின்றன.

இன்றைய வேளாண்மை, தொழிற்சாலை, கட்டடத்துறை, மற்றும் சேவைத் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் இல்லாவிட்டால் எந்த நாடும் முன்னேற இயலாது. அவர்கள் வியர்வையால்தான் பொருளாதாரம் நகர்கிறது. இருப்பினும், இன்னும் பல்வேறு இடங்களில் குறைந்த ஊதியம், குறைந்த பாதுகாப்பு, பணி நிலையற்ற நிலை, தொழில் பாதுகாப்பின்றி பணி நீக்கம் போன்ற அம்சங்கள் நீடிக்கின்றன. குறிப்பாக இலங்கையில் கொரோனா, பொருளாதார வீழ்ச்சி, மற்றும் அரசமைப்புச் சிக்கல்கள் காரணமாக, எளிய தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

மே தினத்தின் உண்மையான நோக்கம், ஒவ்வொரு தொழிலாள ருக்கும் மனித உரிமைகளுடன் கூடிய வாழ்வாதாரத்தை உறுதி செய்தல். தொழிலாளர் சங்கங்கள் இன்று பல இடங்களில்பலவீனமடைந்துள்ளன.அவைவெறும் அரசியல்கருவிகளாகவேபயன்படுத்தப்படுகின்றன. தொழிலாளர்களுக்கான கூர்முனை அரிவாளாக அன்றி, அரசியல்வாதிகளின் கால்துடைப்பான்களாகவேஅவைமாறியுள்ளனர். இளைஞர்கள் பணி நிலையற்ற வாழ்க்கையில் அலைகிறார்கள். பலர் வெளிநாடுகளுக்கு பாய்கின்றனர். இது நாட்டின் தொழிலாளர் ஆதாரத்தைவுமே பலவீனமாக்குகிறது.

மேதினம் வெறும் கூட்டங்கள், பேரணிகள் எனக் குறையாமல், அரசுக்கும், நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாளாக அமைய வேண்டும். தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தனியார்துறையில் வேலை செய்யும் மக்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

தொழிலாள மக்களின் உரிமைகள் என்பது தேசிய வளர்ச்சியின் அடித்தளக் கல்லாகவே அமைந்துள்ளது. தொழிலாளர் சமுதாயத்தின் நலனில்நாட்டின்நலன்அடங்கியுள்ளது. எனவே, மே தினத்தின் மூலம் நாம் நினைவுகொள்ள வேண்டிய பிரதான செய்தி — “உழைப்பாளர் ஒருவரின் உரிமை என்பது முழு சமூகத்தின் பொறுப்பு”என்பதையே ஆகும்.

# அழகையும் சிக்கலான தன்மையையும் கிழக்கு மாகாணம் பிரதிபலிக்கின்றது

### சுவிஸ் தூதரக அரசியல் விவகார முதலாவது செயலாளர் ஜஸ்டின் பொய்லற் தெரிவிப்பு

(சக்திவேல்)

கிழக்கு மாகாணம் அழகையும் சிக்கலான தன்மையையும் பிரதிபலிக்கிறது என சுவிஸ் தூதரக அரசியல் விவகார முதலாவது செயலாளர் ஜஸ்டின் பொய்லற் தெரிவித்தார்.



இன, மத சமூக மக்களின் பன்முகத்தன்மை கொண்ட கிழக்கு மாகாணம் இலங்கையின் அழகு மற்றும் அதன் சிக்கலான தன்மை இரண்டையும் பிரதிபலிக்கிறது என இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான சுவிற்ஸர்லாந்துதூதரகத்தின்அரசியல் விவகார முதலாவது செயலாளர் ஜஸ்டின் பொய்லற் தெரிவித்தார்.



இலங்கையிலுள்ளசுவிற்ஸர்லாந்து தூதரகத்தால் நிதி அனுசரணை செய்யப்பட்டு‘சமூகமாற்றத்திற்காக இளைஞர்களை வலுப்படுத்துதல்’ எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற முதலாவது ஆண்டு ஆராய்ச்சி கருத்தரங்கு நிகழ்வு மட்டக்களப்பில் திங்கட்கிழமை இடம்பெற்றபோது அவர் இக்கருத்தை வெளியிட்டார்.




பக்ற் எனப்படும் சமூக மாற்றத்திற்கான நடவடிக்கைகளை எழுதாக்குதல் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பக்ற் நிறுவனத்தின் சமூக செயற்பாட்டாளர்களான பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளையோரால் சமூக அறிவியல், மனிதநேயம், புவியியல், சுற்றுச்சூழல் அறிவியல், கல்வி உள்ளிட்ட விடயப்பரப்புக்களில் சமூகத்தில் காணப்படும் பல்வேறு சவால் நிறைந்த விடயங்கள் ஆராயப்பட்டு சமர்ப்பிக்கப்;பட்டன.




தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கூட்டிணைவு ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சர்வதேச உள்நாட்டு ஆய்வாளர்கள், துறைசார்ந்த கல்வியாளர்கள், செயற்பாட்டாளர்கள், உட்பட இன்னும் சமூக மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் தொடர்ந்து உரையாற்றிய சுவிஸ் தூதரக அரசியல் விவகார முதலாவது செயலாளர் ஜஸ்டின், இங்கு முக்கியமானது என்னவென்றால், இன, மத சமூகங்களின் பன்முகத்தன்மை கொண்ட இந்தக் கிழக்கு மாகாணத்தில் இந்த நிகழ்வு நடக்கிறது.

கிழக்கு மாகாணம் இலங்கையின் அழகு, அதன் சிக்கலான தன்மை ஆகிய இரண்டையும் பிரதிபலிக்கிறது. அதன் சவால்களையும் அதன் நம்பிக்கைகளையும்புரிந்துகொள்பவர்களைப் போல ஆராய்ச்சி மற்றும் கொள்கைச் சிந்தனை இந்த பிராந்தியத்திலிருந்து வருவது சிறப்பம்சமாகும். இது அனைத்து ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒரு சக்திவாய்ந்த முதற்படியாகும்.

இந்த விடயத்திற்காக நீங்கள் நேரத்தையும் சக்தியையும் யோசனைகளையும் எடுத்துக் கொண்டதற்கு வாழ்த்துக்கள். இது உங்களுக்கு ஓர் ஆரம்பம் மட்டுமே என்றும், சாதகமான மற்றும் நிலையான மாற்றத்தில், மாற்றத்தை ஏற்படுத்த நீங்கள் தொடர்ந்து ஆராய்ச்சியைப் பயன்படுத்தப் போகிறீர்கள் என்றும் நான் நம்புகிறேன்.

உண்மையான, அடிப்படை சவால்கள் மற்றும் மக்களுக்கு மிகவும் முக்கியமான பிரச்சினைகள்பற்றியபுரிதலின்மூலம்மட்டுமே உண்மையில்முக்கியமானகொள்கைகளையும் சாதகமான மாற்றத்தையும்; கொண்டு வர முடியும், ஏனெனில் நீங்கள் இங்கு செய்த பணிகள் இந்த இலக்கை நோக்கிச் செல்ல ஒரு சிறந்த படியாகும், மேலும் கிழக்கு மாகாணத்தின் பன்முகத்தன்மையை பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் ஆண்களும் பெண்களும் பரிந்துரை மற்றும் உரையாடலுக்கான வலுவான ஆராய்ச்சி அடிப்படையிலான தளத்தை உருவாக்குவதே பக்ற் அமைப்பின் நோக்கமாக இருப்பதால், அந்நிறுவனம் இந்த நோக்கத்திற்காக வழிநடத்துவதைக் கண்டு நான் மிகவும் உற்சாகமடைகிறேன். இந்த முயற்சியை ஆதரித்த சுவிற்ஸர்லர்நது தூதரகத்தைப் பற்றி நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். - என்று நான் கூற விரும்புகிறேன். என்றார்.

நிகழ்வில், ஆய்வில் பங்கேற்றிருந்த பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள். ஆய்வாளர்கள், துறைசார்ந்த கல்வியாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு சான்றிதழ்களும் அங்கீகார பாராட்டு விருதுகளும் வழங்கி வைக்கப் பட்டன.

இந்நிகழ்வில் இலங்கையிலுள்ள சுவிற்ஸர்லாந்து தூதரகத்தின் சிரேஷ்ட தேசிய நிகழ்ச்சித் திட்ட அலுவலர் சுசாந்தி கோபாலகிருஷ்ணன், ஜேர்மனி டியூபிங்கன் பல்கலைக்கழகம், சமூக, கலாசார மானுடவியல்துறை பேராசிரியர் பொன்னி அரசு உட்பட இன்னும் பல துறைசார் புலமையாளர்கள் கலந்து கொண்டனர்.

# என்.பி.பியின் தேர்தல் கூட்டம் இராமநாதபுரத்தில் நடந்தது

## மகளிர் விவகார அமைச்சர் பங்குபற்றினார்

தேசிய மக்கள் சக்தியின் பிரச்சாரக் கூட்டம் ஒன்று செவ்வாய்க்கிழுீழமை இராமநாதபுரம் பகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கலந்து தெரிவிக்கையில் ஸ்ரீ

இலங்கைசுகந்திரத்திற்கு முன்னமே1930 ஆம் ஆண்டவிலேமக்களின்நலனுக்காகவேபிரதேசசபைகள் கொண்டுவரப்பட்டன. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் சுகாதார வசதிகளை உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுக்கவும் அத்துடன் காணப்படுகின்ற இயற்கை வளங்களையும் மனித வலுவையும் உரிய முறையில் அந்தந்த பிரதேச சபைகளின் கடமையை ஆகும்.

இவ்வளவு காலமும் இயங்கி வந்த உள்ளூராட்சி சபைகளின் முறைமை முற்றிலும் பிழையானது. ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் கீழ் வாழ்கின்ற மக்களுக்காக அந்தந்த பிரதேச சபைகளின் கீழ் உள்ள வளங்களையும் மக்களின் தேவைப்பாடுகளையும் கண்டறிந்து மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் நிறுவனமே பிரதேச சபையாகும். முறையில் செய்வதே பிரதேசபிரதேச சபைகளின் பொறுப்பாகும்.

தற்பொழுது இருக்கின்ற பிரதேச சபைகள் எங்களுக்கான தேவைகளை முழுமையாக செய்திருக்கின்றனவா நெடுஞ்சாலைகள் மத்திய அரசாங்கத்திற்கு உரியது உல்லக வீதிகள் அனைத்துமே பிரதேச சபைகளுக்கு உரித்தானது. அதுமட்டுமின்றி அப்பகுதியில் உள்ள தெருவிளக்குகளையும் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் சிறுவர் மற்றும் பெரியவர்கள் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யக் கூடிய வகையில் பொருத்தப்பட்டிருக்க வேண்டியது அவசியம் ஆகும். மக்களுக்கு தேவை ஏற்படக்கூடிய வகையில் தேவை ஏற்படும் இடத்தில் பொருத்தப்படும் ஆயின் அனைவருக்குமே பாதுகாப்பாக அமையும்.

அத்துடன் நீர் வடிகால் அமைப்பு சுத்தமாகவும் சுகாதாரத் தன்மையுடனும் காணப்படுவதில்லை மக்களுக்கு ஏற்ற வகையில் நுளம்புகள் பெருகாத வகையில் மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பது முக்கியமானவிடயமாகும். அப்படி இல்லாவிட்டால் சிக்கன்குனியா, டெங்கு காய்ச்சல், யானைக்கால் நோய் மற்றும் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படக்கூடும். இதனை சீர் செய்வதற்கு பிரதேச சபைகள் முழுமையான அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமெனவும்

அத்துடன் மாணவர்களுக்கு பயன்தரக் கூடிய வகையில் வாசிகசாலைகள், விளையாட்டு, மைதானங்கள், பொதுநோக்கு மண்டபங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டியதும் அவசியமாகும்

மேல் குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் மக்களிடம்இருந்துபெறப்படுகின்றவரிபணத்திலேயே இருந்தே அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதுமட்டுமின்றி எங்களின் அரசாங்கத்தில் ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட தமக்கான சம்பள பணப் பெறுவதில்லை எனவும் அத்துடன் அவர்களுக்கானஎரிபொருளையும்அரைவாசியாகவே பயன்படுத்துவதாகவும் தமக்கான பாதுகாப்புகளை கூட பெறுவதில்லை எனவும் தெரிவித்தார்.

அது மட்டும் இன்றி மகளிர் விவகார அமைச்சின் கீழ் முன்பள்ளி சிறுவர்களுக்கான போசாக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் முன்னே அரசாங்கத்தில் ஒரு மாணவருக்கு 60 ரூபா வழங்கப்பட்டதாகவும் தற்பொழுது ஜனாதிபதி ஒரு மாணவருக்கு 100 ரூபா என வழங்கியுள்ளார். அது மட்டும் இன்றி பாடசாலை மாணவர்களுக்காக 6000 ரூபா கொடுப்பனவு மாணவர்களின் சீருடை சப்பாத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் சிறுவர் இல்லங்கள் சிறுவர் நன்னடத்தை பிரிவுகளில் உள்ள மாணவர்களுக்கும் மாதாந்தம் 5000 ரூபா வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

நாட்டில் வாழ்வோருக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். அதேபோன்று பொருளாதாரத்திலும் சமத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். கொழும்பில் எவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ அதே போன்று வடக்கிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் இ.தொ.காவிற்கே வாக்களிப்பர் நந்தகோபால் பாஸ்கரன் நம்பிக்கை

(கேதீஸ்)

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளை வென்றெடுத்தவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா என நுவரெலியா மாவட்டத்தில் கொட்டக்கலை பிரதேச சபைக்கு ரத்னகிரிய தொகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் சேவல் சின்னத்தில் போட்டியிடும் நந்தகோபால் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை பாமஸ்டன் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இலங்கையில் 200 வருடத்திற்கு முன்னர் இருந்தே தேயிலை எமது பெருந்தோட்ட மக்களால் பராமறிக்கப்பட்டு வந்தாலும் இன்று தேயிலை பயிர்ச்செய்கை பறிபோகும் நிலை உருவாகி வருகின்றது. இருந்தும் கூட்டு ஒப்பந்தம்என்றஒன்றுஇருந்தப்படியால்தான் தேயிலை பயிர்ச்செய்கையும் நிலங்களும் பாதுகாக்கப்பட்டு வந்தன. கூட்டு ஒப்பந்தம் என்ற ஒன்று இன்று இல்லாததன் காரணமாக தொழிலாளர்களின் உரிமைகளும் சலுகைகளும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன. உதாரணமாக கூட்டு ஒப்பந்தத்தில் ஒரு தொழிலாளியை நிரந்தரமாக பணி நீக்கம் செய்ய முடியாது. ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு தொழிலாளி 180 நாள்கள் வேலை செய்திருந்தால் அவர் நிரந்தர தொழிலாளியாக பதிவு செய்யப்பட வேண்டும் போன்ற பல்வேறு நிபந்தனைகள் கூட்டுஒப்பந்தத்தில்உள்ளடக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட மக்களுக்கு ஏற்படும் அநீதிகள் மறுக்கப்படுகின்ற உரிமைகள் சலுகைகள் அனைத்தும் கூட்டு ஒப்பந்தத்தினால்தான் பெற்றுக்கொள்ள முடிகிறது. இதனை உருவாக்கிய பெருமை இலங்கைதொழிலாளர்காங்கிரஸின்ஸ்தாபக தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஐயா அவர்களையே சாரும்.

ஆனால் இன்று கூட்டு ஒப்பந்தம் இல்லாமையால் தொழிலாளர்களின் உரிமைகளையும் சலுகைகளையும் மீறப்படுகின்றன. தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகவே இதனை அவர் அன்று உருவாக்கினார். அதுபோல் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானால் பெருந்தோட்ட பகுதிகளில் தனிவீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவரின் திட்டம் ஒவ்வொரு தோட்டத்திலும் முழுமையான கிராமங்களை உருவாக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. மலையகத்தில் தமிழ் கலை, இலக்கியம், பெண்கள்அபிவிருத்தி போன்றவிடயங்களில் அதிக அக்கரை கொண்டு செயற்பட்டவர். மலையக கல்விக்கு வித்திட்டவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஐயா ஆவார்.

1970 ஆண்டு தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஐயா அவர்கள் நாடாளுமன்றம் சென்றார் அதன்பிறகே மலையகமெங்கும் பாடசாலைகள் கட்டப்பட்டன. பின்னர் சீடா என்ற வெளிநாட்டு நிறுவனம் இலங்கைக்கு வந்தது. சீடா நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை மலையகத்திற்கு கொண்டு வர அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஐயா அவர்கள் பெரும்பாடுபட்டார். சீடா மலையகத்திற்குவந்தபின்னரே மலையகத்தில் கட்டிடங்களை காணமுடிந்தது. அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஐயா அவர்கள் முதன் முறையாக மத்திய மாகாணத்திலும் ஊவா மாகாணத்திலும் தமிழ் கல்வி அமைச்சை கேட்டு பெற்றார்.

அக்காலகட்டத்தில் மலையகத்தில் கல்வியின் வளர்ச்சி மிக மோசமாக காணப்பட்டது. அதனை சரிசெய்யவும் மலையக மக்கள் ஏனைய சமூகத்திற்கு மத்தியில் கல்வியில் வளர்ச்சியடைந்து ஏனைய சமூகங்களுக்கு நிகரான சமூகமாக வாழ்வதற்காகவே இந்த கல்வி அமைச்சை மத்திய அரசுடன் பேரம் பேசி பெற்றார். இந்த கல்வி அமைச்சினூடாக மலையகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த எண்ணினார்.

அவர் அன்று எண்ணியவாறு இன்றுவரை மலையகத்தில் கல்வியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் கண்ட கனவு இன்று நனவாகி இருப்பதை காணமுடிகிறது.அரசியல் சாணக்கியத்தின் மூலம் பல சாதனைகளை புரிந்து மலையக சமூகத்தை தலைநிமிர வைத்தவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா.



அன்னாரின் மறைவுக்கு பின்னர் அவர் வழியில் செயற்பட்ட ஆறுமுகன் தொண்டமான் எமது மக்களுக்காக பல்வேறு திட்டங்களை பேரம் பேசி பெற்றுக்கொடுத்தார்.

அவரின் மறைவுக்கு பின்னர் அவரின் புதல்வர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் பல்வேறு அபிவிருத்திகள் இடம்பெற்று வருவதோடு பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரம் குறித்தும் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வருகின்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் மட்டுமே மலையக மக்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்க முடியும்.

எனவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பலப்படுத்த இம்முறை தேர்தலில் மக்கள் அனைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கே வாக்களிப்பார்கள். - என்றார்.

# மட்டக்களப்பு மாநகர சபைக்கு புதிய கட்டடத்திற்கு அடிக்கல்

(சக்திவேல்)

தேர்தல் திணைக்களத்தின் அனுமதியுடன் மட்டக்களப்பு மாநகர சபையின் பணிகளை விரைவாகவும் வினைத்திறனுடனும் முன்னெடுப்பதற்காக உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சால் மட்டக்களப்பு மாநகர சபைக்கு புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

அரசாங்கத்தால் சுமார் நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த மாநகர சபை புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்ஜெயன் தலைமையில் சபை வளாகத்தில் இடம்பெற்றது.

சமய வழிபாடுகளின் பின் அதிதிகளினால் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர்கள், பிரதேச செயலாளர், அரச உயர் அதிகாரிகள், சபையின் உயர் அதிகாரிகள் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு மதிப்பளிப்பு



மட்டக்களப்பு அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்திலிருந்து முதன்முறையாக பொறியியலாளராக தெரிவுசெய்யப்பட்ட மாணவி மற்றும் கலைப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம்இடமும்13ஆம்இடமும் பெற்ற மாணவர்கள் உட்பட பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களைகௌரவிக்கும்நிகழ்வு புதன்கிழமை அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சிறப்புச் சாதனை புரிந்து, மட்.மமே. அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்திற்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்த மாணவர்களையும், அவர்களுக்கு கல்வி வழங்கிய ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.



பாடசாலையின் அதிபர் க.அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுச் சமூக அமைப்பினரும் கலந்துகொண்டு மாணவர்களையும், ஆசிரியர்களையும் வாழ்த்திப் பாராட்டினர்.





காலைக்கதிர் Kalaikkathir

# சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட பலர் திசைகாட்டி சின்னத்தில் தேர்தலில் போட்டி

## சாணக்கியன் சுட்டிக்காட்டு

சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் பலர் திசைகாட்டி சின்னத்திலே தற்போது தேர்தலில் களமிறங்கி இருக்கிறார்கள். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா இங்கு வந்து எமது மக்களின் பிரச்சினைகளை பார்க்கப்போவது அல்ல எமது மக்களுடைய பிரச்சனைகள் எமக்குதான் தெரியும் யானையால் ஒருவர் பாதிக்கப்பட்டால் உடனே அந்த இடத்தின் நிற்பவர்கள் நாங்கள்தான்.



என இங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்ளப்பு மாவட்டம் காக்காச்சுவட்டைக் கிராடத்தில் புதன்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாகு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

இது ஒரு புறம் இருக்க படகு சின்னத்திலே போட்டியிடுகின்றவர்கள் அவர்களுடைய கட்சியின் தலைவருடைய புகைப்படத்தை பிரசுரிக்காமல் துண்டு பிரசுரங்களை வெளியிட்டு இருக்கின்றார்கள். எவராவது தமது கட்சியின் தலைவரின் புகைப்படத்தை பிரசுரிக்காமல் பிரசுரங்களை விநியோகிப்பார்களா? அவர்களுக்கே புரிந்து விட்டது அவர்களுடைய கட்சித் தலைவரின் படத்தை இட்டு பிரசுரங்களை விநியோகித்தால் அவர்களுக்குக் கிடைக்கும் வாக்கும் இல்லாமல் போய்விடும் என்று என அவர் இதன்போது தெரிவித்தார்.

இதன்போது உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# கருப்பை கழுத்துப் புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டல் நிகழ்வு சாய்ந்தமருதில்

(நூருல் ஹுதா உமர்)



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கருப்பைக் கழுத்து புற்றுநோய் தொடர்பாகவிழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஷகீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைவாக இடம்பெற்ற இக்கருப்பைக் கழுத்து புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை சாய்ந்துமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே மதனின் தலைமையில் சாய்ந்தமருது நிலையத்தில் நடைபெற்றது.

அத்துடன் இதில் கலந்து கொண்ட அனைத்து தாய்மார்களுக்கும் உடல்நிறை குறியீட்டெண், இரத்த சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தம் என்பனவும் பரிசோதிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பொதுச் சுகாதார தாதிய சகோதரி, மேற்பார்வை பொது சுகாதார மருத்துவ மாது, பொது சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் 35, 45 வயதுக்கு உட்பட்ட 30 இற்கு மேற்பட்ட தாய்மார்கள் கலந்துகொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





காலைக்கதிர்
Kalaikkathir

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு முன்முயற்சி

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை நாளை (வெள்ளிக்கிழமை) நடத்துவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தயாராகி வருகின்றது.

இது தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இது தொடர்பில் அரச தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள யாழ் போதனா வைத்தியசாலைக்கு அடுத்த படியாக மக்களிற்கானமருத்துவசேவைகளைவழங்குவதில் முக்கியமான வைத்தியசாலையாகும். கடந்த சில ஆண்டுகளில் இவ் வைத்தியசாலையில் கடமையாற்றிய மருத்துவ அத்தியட்சகர்கள், மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் ஏனைய ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கிளை செயற்பாட்டின் மூலம், இவ்வைத்தியசாலை பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

எட்டு ஆண்டுகளுக்கு முன் பதினாறு வைத்தியர்கள் கடமையாற்றிய நிலையில் தற்போதுகிட்டத்தட்ட அறுபதுவைத்தியர்களும் நான்கு உள்ளக வைத்தியர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

பொது வைத்தியம், சத்திர சிகிச்சை, மகப்பேற்றியல், குழந்தை மருத்துவம் மற்றும் கதிரியக்க பிரிவு அனைத்துக்கும் இரண்டு வைத்திய நிபுணர்களும் கடமையாற்றி வருகின்றனர். இவை அனைத்தும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மற்றும் சுகாதார அமைச்சின் ஒத்துழைப்பால் சாத்தியமானது.

அத்துடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையானதுவடமாகாணத்தில்உள்ள ஒரு பிராந்திய புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் நிலையமாகவும் மனநல பாதிப்படைந்த நோயாளிகளுக்கானஒருமுக்கியமானசிகிச்சை வழங்கும் நிலையமாக காணப்படுகின்றது.

தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளாக தெல்லிப்பழை மருத்துவமனை நிர்வாகம் மிகவும் மந்தகதியில் செயற்படுகிறது மற்றும் மனநல சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை மற்றும் பிற சிகிச்சை சேவைகளில் திருப்திகரமான ஈடுபாடு இல்லாமல் இருக்கிறது. இதற்கான முக்கிய காரணம் மருத்துவமனை நிர்வாகியின் செயல்திறன் குறைபாடு மற்றும் அவரது அலுவலகத்திலிருந்து வெளியே வந்து மற்ற வைத்திய நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ குழுவினருடன் நேரடியாக பேசி, பயனுள்ள சந்திப்புகளை ஏற்பாடு செய்து, உடனடி தீர்வுகளை வழங்கும் ஆர்வம் இல்லாமையே ஆகும். இந்த தாமதம் நோயாளிகளின் நலனையும், மருத்துவ சேவையின் தரத்தையும் பாதிக்கின்றது.

புற்றுநோய்களிற்கான சிகிச்சை வழங்குவதில் புற்றுநோய் வைத்திய நிபுணர்கள் பல இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். முக்கியமாக அங்கே நோயாளிகளிற்கான சில பரிசோதனைகள் பல்லாயிரக்கணக்கான (40,000 தொடக்கம் 50,000 வரை) அவர்களின் சொந்த பணத்தை செலவழித்து தனியார் ஆய்வு கூடங்களிலேயே செய்யப்படுகிறது. இதை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் அலகு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அவ்வகையான பரிசோதனைகளை செய்ததற்கு தேவையான ஆய்வுகூட வசதிகளை செய்ய முன்வந்த போதும் வைத்தியசாலை நிர்வாகம் அதற்கான இடம் வழங்குவதில் இழுத்தடிப்பை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் புற்றுநோயின் இறுதி கட்டத்தை அடைந்த நோயாளிகளின் இறுதி நேரங்களை வலியின்றி பராமரிப்பதற்காக விடுதி ஒன்றை அமைப்பதற்கும் புற்றுநோயாளிகளின் மருத்துவ பதிவேடுகளை பேணி பாதுகாக்கத் தேவையான அறையினை நிர்மாணிக்க பல தடவைகள் அனுமதி கோரிய போதும் அதனை வழங்காது பெரும் முட்டுக்கட்டையாக நிர்வாகம் இருந்து வருகிறது. இதனால் புற்றுநோயாளர்களிற்கான சேவையினை பூரணமாக வழங்குவதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் மனநல சிகிச்சை விடுதிகள் மற்றும் பிற விடுதிகளில் வைத்திய நிபுணர்களால் முன்மொழியப்படும் சிகிச்சைத் திட்டங்களை உரிய தரப்புகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளாமல் நிராகரிப்பதன் மூலம், நோயாளர்களுக்கான பூரண சிகிச்சை வழங்குவதில் மருத்துவ நிபுணர்களின் ஒருமித்த சேவையை வழங்க இயலாத புறச்சூழ்நிலைகள் உருவாகின்றன.

நோயாளர்களுக்கான சிறப்பான சேவைகளை வழங்குவதற்காக சுகாதார திணைக்களம் மற்றும் பிரதம செயலாளர் ஆளுநர் அலுவலகங்களில் இடம்பெறும் கலந்துரையாடல்களில் நிறைவேற்றப்படும் முடிவுகளை நிறைவேற்றி நோயாளர்களுக்கு கிடைக்கக்கூடிய அதிக உச்ச சேவையை எமது வைத்தியசாலையில் உள்ள மனித வளங்களையும் ஏனைய வளங்களையும் பயன்படுத்தி வழங்காது தெல்லிப்பழை வைத்தியசாலையை புற்றுநோய் விடுதிகளையும் மனநல நோய் விடுதிகளையும் ஏனைய விடுதிகளையும் திறம்பட நிர்வாகம் தவறியுள்ளது.

அத்துடன் நோயாளர் நலன்புரி சங்க சேமிப்பு நிதியை நோயாளிகளின் மருத்துவ தேவைகளுக்கு பயன்படுத்தாமலும் ஏனைய தொண்டு நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகளினால் நோயாளர்களின் மருத்துவ சேவையை திறம்பட வழங்குவதற்கு முன்வைக்கின்றவசதிகளைவழங்குவதிலும்ஒருங்கிணைப்பதிலும் ஆர்வம் காட்டாது அதற்கு முட்டுக்கட்டையாகவும் நிர்வாகம் இருந்து வருகிறது.

அத்துடன் வைத்தியசாலை ஊழியர்கள் முகம் கொடுக்கின்ற பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக பல முறைப்பாடுகளை முன்வைத்துள்ள போதிலும் அதற்குரிய தீர்வுகளை வழங்காது தான்தோன்றித்தனமான முடிவுகளை மேற்கொள்வதால் வைத்தியசாலை ஊழியர்கள் நோயாளிகளுக்கான சிகிச்சைகளை வழங்குவதில் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

அதிலும் குறிப்பாக கடந்த 02.04.2025 அன்று இரவு ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழையின் அவசர சிகிச்சை பிரிவில் இடம்பெற்ற, தனிநபர் ஒருவரால் வைத்தியசாலை ஊழியர்களின் கடமைக்கும் ஏனைய நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கும் இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பாக, வைத்தியசாலை நிர்வாகம் காத்திரமான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொண்டு இருக்கவில்லை.

இவ்வாறு நிர்வாகத்தின் பல செயற்பாடுகளை கண்டித்தும் குறித்த தினத்தில் நடைபெற்ற சம்பவத்திற்கு எதுவித நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும், வைத்தியர்களுடனும் ஏனைய வைத்தியசாலை ஊழியர்களுடனும் தொடர்புடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறியதை கண்டித்தும், மேலும் அது தொடர்பான நடுநிலையான, பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றை உடனடியாக ஆரம்பிக்க வலியுறுத்தியும், எதிர்வரும் 02.05.2025 அன்று காலை 8.00 மணி முதல் 03.05.2025 காலை 8.00 மணி வரையிலான அடையாள வேலைநிறுத்த போராட்டத்தை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேற்கொள்ள இருக்கின்றது. இதற்கு ஏனைய வைத்தியசாலை தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவிக்க உள்ளன.

எனவே, இதற்குரிய உடனடி விசாரணைகளை வட மாகாண, யாழ் பிராந்திய சுகாதார திணைக்களம், பிரதம செயலாளர், வட மாகாண ஆளுநர் ஆகியோர் ஆரம்பித்து, வைத்தியசாலை ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, மக்களுக்கு உரிய தரமான சிகிச்சை வழங்கும் சேவை நிலையமாக மாற்றுவதற்கான நிர்வாக சூழ்நிலைகளை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. - என்றுள்ளது.



# அல்-ஜலா பாடசாலையின் வரலாற்று சாதனை மாணவிகளை கௌரவித்த பாடசாலை சமூகம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கல்முனை அல்-ஜலால் வித்தியாலத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்ட உயர் தர கலைப்பிரிவு மாணவர்கள் 2024 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி இருந்தனர். வரலாற்றில் முதல் தடவையாக இந்த பாடசாலையில் இருந்து தோற்றிய இம்மாணவர்களில் இருவர் பல்கலைக்கழகம் தெரிவாவாவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

அவர்களில் ஏ.ஏர். சாக்கிரா பானு எனும் மாணவி 3ஏ சித்திகளை பெற்றுள்ளதுடன் ஏ. பாத்திமா தூபா எனும் மாணவி 2பிசி சித்தியைப் பெற்று இந்த வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். ஏனைய மாணவர்கள் 3 பாடங்களிலும் திறமைச்சித்திக்கு மேல் பெற்றுள்ளதுடன் பாடசாலையின் சித்தி வீதம் 84 வீதம் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சாதனையை புரிந்த இம்மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்ளையும் வழிநடத்திய பகுதித் தலைவர், உதவி பகுதித் தலைவர், அதிபர், பிரதி அதிபர் மற்றும் உதவி அதிபர்கள் மற்றும்









வகுப்பாசிரியர் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் டீ.கே.எம். சிராஜ் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பாடசாலை யின் முன்னாள் அதிபருடன் உயர்தர பிரிவின் ஸ்தாபக அதிபருமான எம்.ஐ.எம். சைபுத்தீன், பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சாதனை படைத்து பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களுக்கு நினைவுச்சின்னங்களும் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டதுடன் அவர்களின் பெற்றோர்களும் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் உயர்தரம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் பகுதித் தலைவராகவும் வகுப்பாசிரியராகவும் அரசியல் விஞ்ஞான ஆசிரியராகவும் செயற்பட்ட உயர்தர பிரிவு பகுதித் தலைவர் யூ.கே.எம். முபாறக் அவர்களுக்கான விசேட கௌரவமும் வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் கற்பித்த ஆசிரியர்களும் வழிகாட்டிய வகுப்பாசிரியர் திருமதி சிரூனா பழீல் பிரதி மற்றும் உதவி அதிபர் அவர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் எம்.ஏ.எம். சிராஜ், உதவி அதிபர்களான ஏ. எம். பாஹிம் மற்றும் எம்.பி.எம். பௌசான், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.



# உழைப்பவர் உயர்வை உரைத்திடும் உயர் தினம் !

உழைத்துமே உயர்ந்திடு வோமே
உதிரமே உழைப்பவர் பலமே
உலகமே ஏத்திடு தினமே
உயர்வுடை மே தினமே

உண்ணும் உணவும் உழைப்பே
ஓடும் காரும் உழைப்பே
விண்ணில் பறக்கும் யாவும்
எண்ணி லடங்கா உழைப்பே

விருந்தும் மருந்தும் உழைப்பே
விளக்கின் வரவும் உழைப்பே
அருந்தும் அனைத்தும் உழைப்பே
அனைவரும் மதிப்போம் உழைப்பை

வானுயர் கட்டடங்கள் உழைப்பே
வான்வெளிப் பயணங்கள் உழைப்பே
நீள்கடல் ஆராய்ச்சி உழைப்பே
நிம்மதி தருவதும் உழைப்பே

முத்தினை எடுப்பதும் உழைப்பே
முடியினில் வைப்பதும் உழைப்பே

சொத்தினைக் குவிப்பதும் உழைப்பே
சுகத்தினைக் கொடுப்பதும் உழைப்பே

ஆடைகள் அனைத்தும் உழைப்பே
ஆலைகள் பெருக்கம் உழைப்பே
வீடுகள் அனைத்தும் உழைப்பே
வீதிகள் பெருக்கம் உழைப்பே

உழைத்திடும் கரங்கள் ஓங்கிட வேண்டும்
உழைத்திடும் வர்க்கம் விழித்தெழ வேண்டும்
உழைப்பவர் உரிமை காத்திட வேண்டும்
உழைப்பவர் தினத்தைப் போற்றிடல் உயர்வே

முதலாளி சிறக்கத் தொழிலாளி உழைப்பார்
தொழிலாளி சிறக்க வழியெதும் உண்டா
முதலாளி நினைத்தால் தொழிலாளி சிரிப்பார்
தொழிலாளி முதலாளி தோழமை வேண்டும்

மேதினம் என்பது விழித்தெழு தினமே
மேதினம் என்பது வியர்வையின் தினமே
உழைப்பவர் உயர்வை உரைத்திடும் தினமே
உரத்துரைப் போமே உழைப்பவர் நலமே






மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா



# சாய்ந்தமருதில் டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் முன்னெடுப்பு

(பாறுக் ஷிஹான்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடை மழைக்கு பின்னர் தொடர்ச்சியாக டெங்கு களத்தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபாயம் காணப்படுவதில் இப்பிரதேசத்தில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அண்மையில் டெங்கு நோயாளியாக இனங்காணப் பட்டவரின் வீட்டின் சுற்றுச்சூழலை அவதானித்ததன் பின்னர் அப்பகுதியில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம் காணப்பட்டமையால் அப்பகுதிகளில் உள்ள பல வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன.

அத்துடன் வீடுகள் மற்றும் சூழல்களை டெங்கு நுளம்புகள் பரவக்கூடியயதாக வைத்திருந்த சிலருக்கு எதிராக வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டதுடன் எச்சரிக்கையுடனான ஆலோசனையும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் மேற்குறித்த டெங்கு தடுப்பு களப்பணியானது கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே . மதன் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் அடங்களான குழுவினர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மேலும் குறுகிய காலத்திலும் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்படுவதுடன் மலசலகூடங்களும் சீரமைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பதற்கான வீட்டின் உட்புறத்தையும் சுற்றுப்புற சூழலையும் தொடர்ச்சியாக அவதானித்து டெங்கு நுளம்புகள் பரவுகின்ற இடங்களை சுத்தமாக வைத்திருப்போம் எனும் துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தற்போது மழை பெய்து வருவதால் இதற்கமைய டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை கண்டறிந்து தடுப்பதற்கான டெங்கு கள தடுப்பு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டதுடன் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.

## இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் நிசாம் காரியப்பரின் நூல் வெளியீடு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி திருச்சி எம்.ஐ.ஈ.டி. பொறியியல் கல்லூரியில் நடைபெறவுள்ள உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஒன்பதாவது மாநாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர் எழுதிய 'அந்த கல்முனைகுடி நாள்கள்' கவிதை தொகுப்பு நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்த மாநாட்டின் முதல்நாள் விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதம விருந்தினராக பங்கேற்று, இந்த கவிதை நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கை சார்பாக பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.எம். ஹிஸ்புல்லாஹ் உட்பட மற்றும் சில அரசியல் பிரமுகர்களும் மூத்த கலை, இலக்கியவாதிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## சர்வதேச நடன தின விழா

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நடன தின விழா செவ்வாய்கிழமை மாலை களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.





இந்த சர்வதேச நடன தின விழாவில் இடம்பெற்ற ஆசிரியர்களின் நடன ஆற்றுகைகள் அனைவரினதும் கவனத்தை திரும்பிப்பார்த்த வைத்திருந்தது.

நடன விழாவில் நடன ஆசிரியர்களாலும், அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட, மாணவர் களினதும் நடனங்கள் மேடையை அதிரவைத்திருந்தன.

பட்டிருப்பு கல்வி வலய நடன ஆசிரிய ஆலோசகர் வனிதா சேகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பட்டிருப்பு கல்வி வலயத்தின் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் கலந்து சிறப்பித்தார்.

இதன் போது ஏற்பாட்டு குழுவால் பட்டிருப்பு கல்வி வலயத்தின் பணிப்பாளர் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் பிரதி கல்வி பணிப்பாளர்கள், உதவி கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.



இதன் போது ஆசிரியர்களினதும், மாணவர்களினதும், நடன நிகழ்வுகள் மேடையை அலங்கரித்தன.

## யானை தாக்கியதில் 56 வயது நபர் காயம்

(பர்ஸான்)

யானை தாக்கிய சம்பவத்தில் 56 வயதுடைய நபரொருவர் காயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் கொழும்பு வீதி புணானை பகுதியில் வைத்து செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய நபர் வயல் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டு வீடு செல்லும் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாலமுனை காரியாலயம் திறப்பு

(றிபாஸ்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக பாலமுனை பிரதேசத்தில் போட்டியிடும் ஏ.எல்.எம் அலியாரை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டமும் காரியாலய திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது

பாலமுனை தேர்தல் குழுத் தலைவர் நபீல் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டு தேர்தல் காரியாலயத்தை திறந்து வைத்தனர்.



# தொழிலாளர் தோழர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளையும் அங்கீகாரத்தையும் தேசிய மக்கள் சக்தி அரசு நிச்சயம் வழங்கும்

## அமைச்சர் சந்திரசேகரன் தொழிலாளர்தின வாழ்த்து

தொழிலாளர் தோழர்களுக்கு கிடைக்க வேண்டிய அத்தனை உரிமைகளையும், அங்கீகாரத்தையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிச்சயம் வழங்கும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு -

இந்த உலகை இயக்கிக்கொண்டிருக்கும் - உலக மக்களை வாழ வைத்துக்கொண்டிருக்கும் அத்தனை தொழிலாளர் தோழர்களுக்கும் இந்நாளில் எனது புரட்சிகரமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்று முதல் இன்று வரை எமது நாட்டில் பொருளாதாரம்உள்ளிட்ட அனைத்துவிடயங்களிலும் தொழிலாளர்கள் வழங்கிவரும் பங்களிப்பு அளப்பரியவை. எனவே, உடலாலும், அறிவாலும் உழைக்கிற எவருக்கும் எந்த இடத்திலும் அநீதி இழைக்க இடமளியோம். உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை நாம் எடுப்போம்.



எமது நாட்டில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது உழைப்பை மட்டுமல்ல உயிரைக்கூட இந்நாட்டு மண்ணுக்காக உரமாக்கியுள்ளனர். எனவே, அம்மக்கள் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சூழலை நிச்சயம் நாம் உருவாக்குவோம். தோட்டக் காணிகளை தொழிலாளர் தோழர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

அதேபோல எமது கடற்றொழில் தொழிலாளர் தோழர்களுக்கும் பல்வேறு விடயங்களை நாம் செய்து வருகின்றோம். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எமது ஆட்சியின் கீழ் உழைப்பாளர்களுக்கு எவ்விதத்திலும் அநீதி நடக்காது. - என்றுள்ளது.

# அக்ஷய திதியை முன்னிட்டுப் பொதுமக்கள் மட்டு நகரில் நகைக் கொள்வனவில் ஆர்வம்

உலக வாழ் இந்து மக்கள் புதன்கிழமை தமது வாழ்வில் என்றும் குன்றாத செல்வம் பெருக வேண்டி தமது வாழ்வில் இடம்பெற வேண்டிய நல்ல சுபகாரியங்களுக்கு வேண்டிய நகைகளைக் கொள்வனவு செய்யும் மிக விசேட தினங்களில் ஒன்றான அக்ஷய திதியை முன்னிட்டு மட்டக்களப்பில் சகல தங்க நகை விற்பனை நிலையங்களில் மக்கள் வருகை தந்து தமக்கு வேண்டிய நகை கொள்வனவில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

புதன்கிழமை காலையிலேயே சகல நகைக்கடைகளும் மங்களகரமாக அலங்கரிக்கப்பட்டு சிறப்பு கும்ப வழிபாடுகள் இடம் பெற்றதன் பின்பு தமது நகை வியாபாரங்களில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

இன்றைய இந்த விசேட நாளில் நகை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு



விசேட பரிசல்களும் இதன்போது நகைக்கடை உரிமையாளர்களால் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலுமிருந்து மக்கள் இதன்போது மட்டு நகருக்குச் சென்று தமக்கு வேண்டிய நகைகளை கொள்வனவு செய்ததையும் காணக்கூடியதாக இருந்தது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.05.2025இல் வெளியிடப்பெற்றது